# க.பொ.த சாதாரணதரத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் உள-சமூக பொருத்தப்பாடுகள்: மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள கலவன் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**Rajandran Thakshaayini***

**ஆய்வுச் சுருக்கம்**

பாடசாலைக் கல்வியின் பிரதான நோக்கம் மாணவர்கள் பாடசாலைக்காலம் முடித்து வெளியுலகிற் காலடி எடுத்து வைக்கும் போது அவர்கள் அச்சமூகத்திற்கு ஏற்றவர்களாகவும், நற்பிரஜைகளாகவும், அன்றைய காலத்திற்கேற்ற அறிவு, திறன், மனப்பாங்கு, பழக்கவழக்கம் என்பவற்றைப் பெற்று அவர்களை வெளியேற்றுவதாகும். எனவே இதற்கமைவாகவே பாடசாலைச் செயற்பாடுகள் அமைதல் வேண்டும். இவற்றுள் மாணவர்களின் உள-சமூக பொருத்தப்பாடு என்பது அவர்களின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிப்பதில் பாரிய பங்கெடுக்கின்றது. பாடசாலைச் சமூகமானது மாணவர்கள் மீது கூடுதலான எதிர்பார்ப்புக்களைக் கொண்டு காணப்படுகின்றது. அதுமாத்திரமின்றி பெற்றோரும் தமது பிள்ளைகள் மீது எதிர்பார்ப்புக்களைக் கொண்டுள்ளனர். அவை மாணவர்களது பாடத்தெரிவில் இருந்து தொழில் தெரிவு வரை பரந்து செல்கின்றது. பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்கும் மாணவ பருவத்தினரிடத்தே இந்நிலையையைப் பொறுத்து தம்மீது எதிர்பார்ப்புக்கள் திணிக்கப்படுவதாகவே கருதுகின்றனர். அதுமாத்திரமின்றி இப்பருவத்தினரைப் பொறுத்து தமது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தடையாக அமையும் காரணிகளாக பாடசாலைச் சமூகத்தையும் பெற்றோரையும் கருதுகின்றனர். இதன்படி இவ்வாய்வானது அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், ஆகியோர் மாணவர்களின் கற்றலில் கொண்டுள்ள எதிர்பார்ப்புக்களுக்கும் மாணவர்களது கற்றல் எதிர்பார்ப்புக்களுக்கும் இடையே காணப்படும் வேறுபாடானது மாணவர்களின் உள-சமூக பொருத்தப்பாட்டில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதனை ஆய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆய்வுப் பிரதேசமாக மட்டக்களப்பு கல்வி வலயம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. ஆய்வுக் குடித்தொகையாக க.பொ.த சாதாரண தர மாணவர்கள் காணப்படுவதால் இக்கல்வி வலயத்திலுள்ள 22 1C மற்றும் வகை II கலவன் பாடசாலைகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளிடம் இருந்து பொருத்தமான தரவு சேகரித்தற் கருவிகளைப் பயன்படுத்தி தரவுகள் பெறப்பட்டு அவை விபரணப் புள்ளிவிபரவியல் முறையைக் கையாண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**பிரதான சொற்கள்:** பொருத்தப்பாடு, இடைவினை, எதிர்பார்ப்புக்கள்

To whom correspondence should be addressed: thakshaa8184@gmail.com

*Lecturer, Department of Education and Child Care, Eastern University of Sri Lanka.